நாள்: 07.11.2025
OS. 38/2018
பெயர் தயாளன்
வா.சா.2

<u>குறுக்கு விசாரணை</u>

நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை சங்கதிகளை படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டுள்ளேன். நான் விவரம் சொல்லிதான் முதல் விசாரணை வாக்குமூலம் தயார் செயப்பட்டது. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. வழக்கறிஞர் தகவல் கொடுத்ததால் வந்துள்ளேன். இந்த வழக்கை வீரையா, காந்தி மற்றும் பூங்கொடி மீது தாக்கல் செய்துள்ளார். நான் பிரதிவாதிகளுக்கு வேறு புரோநோட்டு எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. புரோநோட்டு ஒரே மையினால் எழுதப்பட்டது என்றால் நான் கருப்பு நிற மையினால் புரோநோட்டை பூர்த்தி செய்தேன். அவர்கள் தனியாக கருப்பு நிற மை பேனாவை கொண்டு கையெழுத்து போட்டார்கள். புரோநோட்டில் ஒரு நபர் துரைச்சாமி என்பவர் மட்டும் சாட்சி கையெழுத்து போட்டார். அவர் தந்தை பெயர் எனக்கு தெரியாது. 25.12.2016 ல் புரோநோட்டு எழுதினேன். என் முன்பு தான் பிரதிவாதிகள் , வாதியிடமிருந்து பணத்தை பெற்றுக்கொண்டார்கள். எத்தனை ரூபாய் நோட்டுகளாக கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் சந்திரன் த/பெ, ராமர்தேவர் என்ற கம்பத்தை சேர்ந்த நபருக்கு நான் புரோநோட்டு எழுதிக்கொடுக்கவில்லை என்றால் இல்லை. நான் புரோநோட்டை எழுதிக்கொடுத்துளளேன் என்றும், அந்த புரோநோட்டு சம்பந்தமான வழக்கு முதன்மை மாவ்ட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.95/2019 ஆக நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் மேற்படி வழக்கு 95/2019 வழக்கில் உள்ள 05.12.2018 புரோநோட்டில் உள்ள எழுதியதும் சாட்சியம் என்பதில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். பிரதிவாதிகள் மதுரை மற்றும் தேனி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் எனக்கு எதிராக புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கு புரோநோட்டை எத்தனை மணிக்கு எழுதினேன் என்றால் சரியாக ஞாபகம்இல்லை. மதியத்திற்கு மேல் இருக்கும். நான் B.A பட்டதாரி. காந்தி தமிழில் கையொப்பம் போட்டார், அவர் மனைவி ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டார். பிரதிவாதியின் முகவரி எனக்கு தெரியாது. அன்று புரோநோட்டு எழுதிய தேதியில் மதுரையிலிருந்து வந்து கையெழுத்து போட்டார்கள். தற்போது எங்கு

உள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. வாதி என்னுடைய நண்பர் என்றும், அவர் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார் என்றும், அவருக்கு ஆதரவாக பல புரோநோட்டுகளை மோசடியாக எழுதிக்கொடுததுள்ளேன் என்றால் சரியல்ல. நான் BA வரை படித்துள்ளதால் எனக்கு புரோநோட்டு எழுதிய நேரம் சரியாக தெரியும் என்றும், ஆனால், மோசடியாக புரோநோட்டு உற்பத்தி செய்ததால் தான் எனக்கு நேரம் தெரியாது என்றால் சரியல்ல. புரோநோட்டை மோசடியாக உற்பத்தி செய்ததால் தான் அவர்கள் முகவரியை எனக்கு தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதி நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம் M.சிவாஜி செல்லையா,
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.